- முத்தமிழறிஞர் கலைஞரின் மிகச் சிறந்த பதிப்பு, "தளபதி மு.க.ஸ்டாலின்' என்ற புத்தகம்தான்!
- 'முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள்' என்பது – 'அழியாத தமிழினம்' என்ற தத்துவத்தின் அடையாளம்!

பல துறைகளிலும் இன்று தமிழர்கள் கோலோச்சுவதற்கு

முத்தமிழறிஞர் கலைஞரின் செயல்பாடே மூலக்காரணம்!

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் – மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ.

முன்னின்று நடத்திய 'முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா மாபெரும் புகழரங்கில்' சுகி சிவம் புகழாரம்!

சென்னை. ஜூன் 7

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. நிகழ்ச்சி ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளையொட்டி "பன்முக ஆற்றலின் நாயகன் ! பலர் வாழ உழைத்த சூரியன் !" எனும் தலைப்பில் பிரமாண்ட புகழரங்க நிகழ்ச்சி, சென்னை பாரிமுனை ராஜா அண்ணாமலை மன்றத்தில் மிகச் சிறப்புற நடைபெற்றது.

இப்புகழரங்கில் புகழ்பெற்ற பட்டிமன்றப் பேச்சாளர் சுகிசிவம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அவர் தனது உரையில், "பல துறைகளிலும் இன்று தமிழர்கள் கோலோச்சுவதற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயல்பாடே மூலக் காரணம்!" என்று புகழாரம் சூட்டினார்.

இப் புகழரங்கில் சுகிசிவம் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

அனைவருக்கும் என்னுடைய பணிவன்பான வணக்கங்களை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தம்பி சிநேகன் அவர்கள் பேசியதைப் போன்று, ஆவேசமாக, ஆக்ரோஷமாகப் பேசும் வயது எனக்குக் கடந்துவிட்டது.

நான் இன்றைக்கு உங்களுக்கு ஒரு வகுப்பு நடத்தப் போகிறேன். அந்த வகுப்பை நீங்கள் பொறுமையாகக் கொஞ்சம் கேட்க வேண்டும்.

டாக்டர் ஜெகத்ரட்சகன் அவர்களைப் போன்று, கவிதையாகவே பேசும் நிலையும் இப்போது எனக்கு இல்லை. அவருக்கு மட்டும் வயது ஆகவே மாட்டேன் என்கிறது. ஆழ்வார்களின் அமுதத் தமிழைப் படிப்பதால், என்றும் மாறா இளமைஉடையவராகவே இருக்கிறார்.

இந்தியாவின் உண்மையான அதிகாரம் யாரிடம்?

நான் இன்றைக்கு முதலில் உங்களுக்குச் சொன்னதைப் போன்று, வகுப்பு நடத்தப் போகிறேன் என்று சொன்னதால் முதலில் ஒரு கேள்வி கேட்கப் போகிறேன். ஒரு 15 நிமிடம் என்னோடு நீங்கள் பயணிக்க வேண்டும்.

"இந்தியாவிலேயே இன்றைக்கு வலிமையான மனிதன் என்று ஒருவரைச் சொல்வதென்றால், அவர் யார் என்று நினைக்கிறீர்கள்?"

நீங்கள் வேறு ஒரு அர்த்தத்தில் சொல்கிறீர்கள். அதாவது செயல் திறனில், மக்கள் மனதில் போராடும் தன்மையில் ஒரு தலைவரைச் சொல்கிறீர்கள். ஆனால் நான் சொல்வது, அடக்கி அனைத்தையும் நிறுத்தும், இந்திய அளவில் இருக்கும் ஒற்றை மனிதன். நீங்கள் அடையாளம் கண்டுபிடித்தீர்களா?

நீங்கள் மீண்டும் மீண்டும் புகழின் பின்னாலேயே போகிறீர்களே ஒழிய, உண்மையின் பின்னால் போவதற்குப் பயணிக்கத் தொடங்கினால் மட்டும்தான் மீண்டும் உங்களால் எழுந்து நிற்க முடியும். நான் உங்களுக்கு வகுப்பு நடத்துகிறேன் என்று சொன்னேன். இன்றைக்கு உண்மையிலேயே இந்தியாவிலே மிக மிக வலிமையான ஒரே மனிதன் யார் தெரியுமா? மோகன் பகவத். நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

உங்கள் எதிரி யார் என்று தெரியாத வரை, நீங்கள் வெற்றிக்களத்தை ஒருபோதும் அடையாளம் காண முடியாது. இந்த நாடு யாருடைய கண்ணசைவின் பெயரில் போய்க்கொண்டிருக்கிறது என்பதைப் பற்றிய புரிதல் இன்னும் தமிழ்நாட்டு மக்களுக்கு ஏற்படவில்லை. ஆர்.எஸ்.எஸ்.ஐ. (RSS) இயக்கிக் கொண்டிருக்கும் மோகன் பகவத் தான் இன்றைக்கு இந்தியாவின் உண்மையான சர்வாதிகாரி என்பதை நீங்கள் புரிந்து கொள்ளாத வரையில், அடுத்த தேர்தலில் களம் காண்பது கடினம். அவருடைய விருப்பப்படிதான் இந்தியா தன்னுடைய போக்கைக் கொண்டு போய்க் கொண்டிருக்கிறது.

வெளியே பார்க்கும் போது நரேந்திர மோடி ஒரு பலமுள்ள மனிதராகக் காட்டப்படுகிறாரே ஒழிய, மிகத் தெளிவாகச் சொல்லுகிறேன்... அவர் ஒரு சோளக்கொல்லை பொம்மை. உண்மையான ராட்சசன், இந்த நாட்டை ஆட்டி வைக்கும் வலிமை உடையவர் இன்றைக்கு யார்? நான் சொல்லும் ஆர்.எஸ்.எஸ்.னுடைய மோகன் பகவத் தான்.

நூறாண்டுத் திட்டத்தின் ஆபத்து!

ஏன் சொல்கிறேன் என்றால், நூறு ஆண்டுகளுக்கு முன்பு காந்தியடிகள் வீழ்ச்சி அடைந்த பிறகு, காந்தியடிகளின் உடல் இந்த மண்ணிலே விழுந்த பிறகு, அன்று ஒரு விதை போட்டார்கள். "இந்த நாட்டை எப்படி முழுமையாக 100 ஆண்டுகளுக்குள் தாங்கள் நினைப்பது போல் கொண்டு போக வேண்டும்?" என்று வெறித்தனமாக ஒரு கூட்டம் திட்டமிட்டது. அவர்கள் திட்டத்தின் ஒவ்வொரு அங்கத்தைத்தான் ஒவ்வொரு காலகட்டத்திலும் நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். உண்மையில் இப்போது நடப்பது உங்களுக்கு இந்திய அளவிலே ஒரு ஜனநாயக ஆட்சி அல்ல.

இந்து சர்வாதிகாரம்!

ரஷ்யாவில் எப்படி கம்யூனிச சர்வாதிகாரம் வளர்ந்திருக்கிறதோ, சீனாவில் எப்படி கம்யூனிச சர்வாதிகாரம் வளர்ந்திருக்கிறதோ, அப்படி ஒரு இந்து சர்வாதிகாரத்தை ஆர்.எஸ்.எஸ். கொண்டுவர விரும்புகிறது. இந்த இந்து சர்வாதிகாரம் இந்த நாட்டுக்கு வந்தால் என்னவாகும்? நான் வேறு எந்த நோக்கத்துக்காகவும் இவர்களோடு இணைந்து பணியாற்றவில்லை. இந்து சர்வாதிகாரம் என்ற ஒன்று இந்தியாவில் ஏற்பட்டுவிட்டால், இந்த நாடு அன்றோடு வீழ்ச்சி அடைந்துவிடும். அதன் பிறகு இந்த நாட்டை எழுப்பி நிறுத்துவது கடினம்.

அது நடக்காமல் இருப்பதற்கு ஒவ்வொரு காலத்திலும் ஒரு தலைவனை இந்த உலகம் கொடுத்தது. அப்படிப்பட்ட தலைவர்களில் ஒப்பற்ற தலைவன்தான் டாக்டர் கலைஞர் அவர்கள்.

உங்களுக்கு வரலாறு புரிய வேண்டும்; என்ன நோக்கத்தில் அவர்கள் இந்தியாவைக் கொண்டு போகிறார்கள் என்பது புரிய வேண்டும். உங்களுக்குத்தெரியுமோ தெரியாதோ, அனைத்து கட்சிகளிலும் உச்சத்தில் இருப்பவர்களுக்குப் பக்கத்தில் ஆர்.எஸ்.எஸ். காரர்கள் இருப்பார்கள். இது போன்ற திட்டமிடுதல், சூழ்ச்சி செய்தல் இவற்றை எல்லாம் கற்றுக்கொள்ளாமல் அரசியல் நடத்த முடியாது என்பதைத் தயவுசெய்து மீண்டும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

என்ன வேண்டுமோ அதை நோக்கி அவர்கள் நகர்த்துவார்கள். அதன் காரணமாக, நாம் இயல்பாகப் பெறும் வெற்றி என்பதை இயல்பாகப் பெற்றுவிட முடியாதபடி, அவர்கள் வஞ்சனையால் இந்த வெற்றியை மாற்றி அமைப்பார்கள் என்ற ரகசியத்தைத் தயவுசெய்து புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த நாட்டில் அந்த விபத்து நடக்காமல் இனி இருக்க வேண்டும் என்றால், கொள்கை அடிப்படையில் இந்த நாடு ஒரு இந்து சர்வாதிகார நாடாக மாறுவது ஆபத்தானது. ஏன் என்று கேட்டால், அதன் பிறகு நீங்கள் உலகத்தில் இருக்கும் கிறிஸ்துவ நாடுகளோடும் நட்பு கொள்ள முடியாது. வளைகுடா முஸ்லிம் நாடுகளோடும் நட்பு கொள்ள முடியாது. இந்தியர்கள் உலக அரங்கத்தில் வேலை பார்க்க முடியாது; இந்தியா தனிமைப்படுத்தப்படும்; இந்தியப் பொருளாதாரம் வீழ்ச்சி அடையும்.

எனக்கொன்றும் ஆர்.எஸ்.எஸ். மீது எந்தக் கோபமும் இல்லை. ஆனால், இந்தியாவை அந்தக் கொள்கை நாசமடைய வைத்துவிடும் என்ற ஒரே வருத்தத்தால் தான் இன்னும் நான் பேசிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் இந்தக் கொள்கைகளை, இந்தத் திட்டங்களை, இந்தச் செயல் திட்டங்களைப் புரிந்து கொண்டால் மட்டும்தான் சரியான மாற்றத்தை நோக்கி கொண்டு போக முடியும்.

தேர்தல் பின்னணியும் அமித்ஷாவின் திட்டமும்

இப்போதுகூட, மிகுந்த மரியாதைக்குரிய நம்முடைய தளபதி அவர்கள் மிகுந்த மரியாதைக்குரிய, மிகப்பெரிய ஒரு உச்ச நிலையில் இருந்து மக்களால் மீண்டும் மீண்டும் கொண்டாடப்பட வேண்டிய ஒரு பெரிய தலைவனாக இருந்திருக்க வேண்டிய ஒரு சூழல், விபத்து போன்று நழுவிப் போய்விட்டது. இதை நீங்கள் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். அந்தக் காலகட்டத்தில் அவர்கள் ஒரு முடிவெடுக்கிறார்கள். என்ன முடிவெடுக்கிறார்கள்? தன்னுடைய கூடவே இருக்கிறவர்கள்கூட இப்போது அமைந்திருக்கும் ஓர் அரசோடு இணைந்து பணியாற்றுவதற்கு அவர்கள் அனுமதி வழங்குகிறார்கள்.

இதை நீங்கள் எப்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னால், எப்படிப்பட்ட சூழ்நிலை இந்தியாவில் உருவாக்கப்பட்டது? ஒரே வார்த்தை சொல்கிறேனே... இந்தத் தேர்தலில் யார் வென்றார் என்று உங்களால் சொல்ல முடியுமா? இந்தத் தேர்தலிலே யார் வெற்றி பெற்றார் என்று உங்களில் யாராவது சொல்ல முடியுமா?

ஒருவர் 108 இடங்கள் வாங்குகிறார்; இன்னொருவர் 70 சில்லறை இடங்கள் வாங்குகிறார்; இன்னொருவர் 40 சில்லறை இடங்கள் வாங்குகிறார். இந்தத் தேர்தலில் அப்படியானால் யார் வெற்றி பெற்றார்கள்? நீங்கள் உண்மைகளைப் புரிந்து கொள்ளாமல் உங்களால் அரசியல் நடத்த முடியாது. நான் அரசியல் கட்சி சார்ந்தவன் அல்ல, ஆனால் அரசியல் சிந்தனையாளன். நான் சொல்வதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றவர்அமித்ஷாமட்டுமே. இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றவர் அமித்ஷா மட்டுமே.

ஏனென்றால், தமிழ்நாட்டில் ஒரு பலமான அரசு இருக்கக்கூடாது; இந்திய அளவில் எப்போதும் முன்னேறிக்கொண்டிருக்கும் தமிழர்கள் வாழ்க்கை வீணாக வேண்டும் என்பதற்காக, திக்குமுக்காடும் ஒரு சூழ்நிலையில் தமிழகத்தைக் கொண்டு வந்து நிறுத்த வேண்டும் என்று அமித்ஷா திட்டமிட்டு, அதனுடைய செயல் விளைவைத்தான் இப்போது தமிழ்நாடு சந்தித்துக் கொண்டிருக்கிறது.

நீங்கள் உங்கள் உண்மையான எதிரிகளை அடையாளம் காணாத வரையில் எப்படிப் போர் செய்யப் போகிறீர்கள்? யாரை நோக்கி வாள் சுழற்றப் போகிறீர்கள்? யாரை எதிர்த்து நீங்கள் இந்தக் காரியத்தைச் செய்யப் போகிறீர்கள்?

என்ன நடந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இங்கே யாருமே ஆட்சிக்கு வரக்கூடாது, மக்கள் தீர்மானிப்பது நடக்கக்கூடாது. இங்கே ஒரு வலிமையான அரசாங்கமே தமிழ்நாட்டில் இருக்கக் கூடாது. அப்படி இல்லாமல் இருந்தால்தான் மத்திய அரசு அல்லது ஒன்றிய அரசு நினைக்கும் கருத்துக்களை உள்ளே கொண்டுவர முடியும்.

தமிழ்நாடு ஆளுநர் அரசியலும் மு.க.ஸ்டாலினின் முடிவும்

என்ன நடந்திருக்கும் தெரியுமா? இந்த நாட்டு ஜனநாயக மரபிலே அதிக எண்ணிக்கை பெற்ற கட்சியை ஆட்சிக்கு அழைக்க வேண்டும் என்பது எழுதப்படாத சட்டம்; உச்ச நீதிமன்றம் (Supreme Court) பலமுறை உச்சரித்திருக்கிறது. ஆனாலும் ஆளுநர் அப்படி அழைக்கவே இல்லை ஒரு கட்சியை. அப்படியானால் அவர்களுடைய திட்டம் என்ன? அவருடைய நோக்கம் என்ன?

அவர்கள் என்னநினைக்கிறார்கள்? ஒரு கட்சிகூட இந்த ஆட்சிக்கு வரக்கூடாது, ஒரு ஆறு மாத காலம் இங்கே மீண்டும் அவர்களின் ஆட்சி நடக்க வேண்டும் என்று. அப்போதுதான் நசுக்க வேண்டியவர்களை நசுக்க முடியும், அப்போதுதான் திணிக்க வேண்டியவற்றைத் திணிக்க முடியும், முடிக்க வேண்டியவற்றை முடிக்க முடியும் என்று ஆறு மாத காலம் அவர்கள் இங்கே தங்களுடைய ஆட்சியை நிலைநிறுத்த வேண்டும் என்று விரும்பினார்கள்.

அதிலும் உங்களுக்குத் தெரியாத ரகசியத்தை இப்போது நான் சொல்கிறேன். தமிழ்நாட்டுக்கு என்று இன்னமும் முறையான ஒரு ஆளுநர் நியமிக்கப்படவில்லை. இந்த தமிழ்நாடு ஒரு நிரந்தர ஆளுநருக்குக்கூட தகுதியற்றதா? ஒரு முழுமையான ஆளுநருக்குக்கூட இந்த தமிழ்நாடு தகுதியற்றதா? தமிழ்நாட்டை எப்படி அவமானப்படுத்தி இருக்கிறார்கள் என்று உங்களுக்குப் புரிகிறதா? தமிழ்நாட்டுக்கு நிரந்தரமான ஒரு ஆளுநர்கூட இல்லை, அந்த வஞ்சனையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அவர்கள் விரும்பியது, இங்கே யாருமே ஆட்சிக்கு வர முடியாதபோது, மீண்டும் மேற்கு வங்காளத்தில் இருந்து ஆர்.என். ரவி இங்கே அழைத்து வரப்படுவார். அவர் ஐந்து ஆண்டுகளாக எதற்கு இங்கே நம்மையெல்லாம் அவமானப்படுத்திக் கொண்டிருந்தாரோ, அதை ஆறு மாத காலம் இங்கே நிறைவேற்ற வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு காத்திருந்தார்கள். அதைத் தடுத்த பெருமகன்தான் தளபதி ஸ்டாலின் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆர்.என். ரவி என்பவர் மீண்டும் தமிழ்நாட்டுக்குள் வந்து, ஆறு மாத காலத்தில் அத்தனையும் தான் தீர்த்துவிட்டுப் போக வேண்டும் என்று நினைத்த வெறியை அடக்கி வைத்த பெருமை தளபதி ஸ்டாலின் அவர்களுக்குத் தான் உண்டு.

அரசியலில் நுட்பமான பகுதியை நீங்கள் பார்க்க வேண்டும். அவருக்கு நன்கு தெரியும். நம்மோடு இருக்கிறவர்கள் அங்கே போவது என்பதில் இருக்கும் சிக்கல் என்ன என்று தெரியும் என்றாலும், அனைத்து வேதனைகளையும், அனைத்து அவமானங்களையும், அனைத்து துக்கங்களையும் சகித்தே பழகப்பட்ட ஸ்டாலின் அவர்கள், இவற்றை எல்லாம் மனதளவில் ஏற்றுக்கொண்டு, அனைத்து கஷ்டங்களையும் ஏற்றுக்கொள்ளும் இயல்புடைய ஒரு பெரிய மனிதன். அதனால் இவற்றை ஏற்றுக்கொண்டு, தமிழ்நாட்டில் மறந்தும் அப்படி ஒரு ஜனாதிபதி ஆட்சி வந்துவிடக் கூடாது என்பதற்காக, ஒரு அருமையான முடிவை அவரே மனதில் வகுத்துக்கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஜனநாயகக் கோட்பாட்டுக்கு விரோதமானது!

அடுத்த ஓர் உண்மையைப்புரிந்து கொள்ள வேண்டும். அரசியலைப் பற்றிய அறிவு தமிழ்நாட்டு மக்களுக்கு இன்னும் வளரவில்லை, இந்தியர்களுக்கே வளரவில்லை. ஜனாதிபதி ஆட்சி என்ற உடனே, ஒரு கவர்னர் தன் விருப்பப்படி இரண்டு அட்வைசர்களை வைத்துக்கொண்டு நடத்துகிறார். நம்முடைய அரசமைப்புச் சட்டப்படி அது தவறு. இது ஜனநாயக நாடு; ஒரு தனி மனிதன் தான் விரும்பிய எண்ணப்படி ஆட்சி நடத்துவது சட்டத்தில் இருந்தாலும், அரசமைப்புச் சட்டத்தில் இருந்தாலும், அது ஜனநாயகக் கோட்பாட்டுக்கு விரோதமானது.

இப்போது நான் சொல்லுகிறேன், ஒரு மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டு வருவதாக இருந்தால், ஒற்றை ஆளுநருடைய உத்தரவுப்படி அங்கே எந்த ஆட்சியும் நடக்கக்கூடாது. அங்கே இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய மொத்த எண்ணிக்கையைப் பார்த்து, அவர்களது ஆலோசனைப்படிதான் அந்த மாநிலத்து ஆளுநர் ஆள வேண்டுமே ஒழிய, தனிமனித சர்வாதிகாரத்திற்கு இந்திய அரசமைப்புச் சட்டம் இடம் தரக்கூடாது. இவற்றையெல்லாம் நீங்கள் யோசிக்க வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து, இப்ப நமக்கு ஒரு 40 நாடாளுமன்ற உறுப்பினர் இருக்கிறார் என்றால், கவர்னர் தீர்மானத்தைக் கொண்டு வர வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒப்புக்கொண்டதை மட்டும்தான் கவர்னர் நிறைவேற்ற வேண்டுமே ஒழிய, அவர் இச்சையாக உத்தரவு போடக்கூடாது என்று இந்திய அரசமைப்புச் சட்டத்திலேயே மாற்றம் வந்தாக வேண்டும். நான் சொல்வதெல்லாம் இந்த நாட்டை மீண்டும் மாற்றி அமைப்பதற்கு, கட்டமைப்பதற்குரிய பல்வேறு செய்திகள்.

அண்ணா, கலைஞர் சித்தாந்தத்தின் முக்கியத்துவம்

இதை ஏன் நான் இங்கே பேசுகிறேன் என்றால், இதுபோல் சிந்தித்த ஒப்பற்ற பெரிய மனிதன்தான் முத்தமிழ் அறிஞர் கலைஞர் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். என்ன செய்தார் அவர்? சில பேர் படிக்க முடியாது, சில பேர் வேலைக்கு வர முடியாது, வெறும் சில பணக்காரர்கள் கையில் நாட்டின் பொருளாதாரம் இருக்கும், மக்கள் எப்போதும் அஞ்சி அஞ்சிச் சாவார்கள் என்பதைப் போன்று அவர்கள் ஒடுக்கப்பட்டவர்களாக எப்போதும் கீழேயே இருக்க வேண்டும் என்ற நிலை இருந்தது.

இதை மாற்றி அமைப்பதற்கு அந்த மனிதன் பட்ட பாடு என்ன? நான் மீண்டும் சொல்கிறேன், அவர்களைக் கைதூக்கி விடுவதற்கு அந்த மனிதன் பட்ட பாடு என்பதை அவர்களில் பலரே மறந்து போனார்கள். அவர்களில் பலரே தாங்கள் பெற்ற உயரங்களுக்கெல்லாம் இந்த மனிதன்தான் காரணம் என்ற அடிப்படை உணர்வுகூட இல்லாமல் போய்விட்டார்கள்.

இந்த மனிதன் இந்த தமிழ்நாட்டுக்குள் வராமல் இருந்திருந்தால், பலபேர் கிராமங்களில் ஆடு மாடுகளை மேய்த்துக்கொண்டுதான் இருந்திருக்க வேண்டும். அவர்கள் வாழ்வின் மிக உயர்ந்த இடங்களை ஒரு போதும் அடைந்திருக்க முடியாது. உயர்நீதிமன்றங்களிலும், வேறு பல இடங்களிலும் இன்றைக்குப் பல தமிழர்கள் கோலோச்சுவதற்கு மூல காரணமாக இருந்தது பேரறிஞர் அண்ணாவின் சித்தாந்தமும், கலைஞரின் செயல்பாடும். இதையெல்லாம் புரிந்து கொண்டால்தான், நாம் சரியான ஓர் அரசியல் வகுப்பைக் கற்றுக்கொண்டதாக அர்த்தம் ஆகும்.

சினிமா காதலும் தமிழ்நாட்டின் தற்போதைய நிலையும் (விஷம் குடித்த பிள்ளை)

இப்போது நான் வேறு ஒரு செய்தியை உங்களுக்கு முன்பு சொல்வதற்கு விரும்புகிறேன். அண்மையிலே நடைபெற்ற தேர்தலில் ஒருவர் வென்றது, அல்லது வென்றது போன்று காட்சி அளிப்பது, அல்லது வென்றது போல் உங்களுக்குக் கட்டமைக்கப்பட்டது, இப்படி எத்தனையோ வார்த்தைகளை நீங்கள் பயன்படுத்தலாம். ஆனால் நான் உங்களுக்கு ஒன்று சொல்லுகிறேன்; அது எவ்வளவு பெரிய விபத்து என்பதைப் புரிய வைப்பதற்கு ஓர் உண்மையை உங்களுக்கு நான் புரிய வைக்கிறேன்.

என்னுடைய மருத்துவர் ஒருவர், அவர் ஒருமுறை வருத்தப்பட்டு ஒரு செய்தி சொன்னார். நான் அவருடைய மருத்துவமனையிலே காத்திருந்தேன், அவர் வருவதற்குத் தாமதமாயிற்று. "என்னய்யா எங்க போயிட்டீங்க, இவ்வளவு நேரம் ஆச்சே காணுமே?" என்று கேட்டேன்.

அவர் சொன்னார்: "எங்க வீட்ல வேலை பார்க்கிற அம்மா, அந்த வேலை பார்க்கிற அம்மாவோட பையன் விஷம் குடிச்சிட்டு சாவுறதுக்கு போயிட்டான். கடைசில அப்படி இப்படி கொண்டு போய் ஆஸ்பத்திரில போட்டு இருக்காங்க. அதனால நான் அங்க போய் பார்த்து எல்லா ஏற்பாடும் பண்ணி, அவன காப்பாத்தறதுக்கு எல்லாம் பண்ணிட்டு அப்புறமா நான் இங்க வரேன்" என்றார்.

"அய்யயோ அப்படியா, ஏன் விஷம் குடிச்சான்?" என்று கேட்டேன். "அவன் காதலிச்சான். காதலிச்ச பொண்ணைக் கல்யாணம் பண்ணனும்னு சொன்னான். அவங்க வீட்லயும் ஒத்துக்கல, பொண்ணு வீட்லயும் ஒத்துக்கல. அவன் விஷத்தைக் குடிச்சிட்டான்."

"சரி, இப்ப என்ன நடந்திருக்குது?" என்று கேட்டேன். "இனிமே அவன் உயிரோட இருந்தும் வேஸ்ட்" என்றார். "என்னது? அவன் உயிரோட இருந்தும் வேஸ்ட்டா?" என்று கேட்டேன். "ஏன், காப்பாத்திட்டோம்... இங்க இருந்து குடல் வரைக்கும் வெந்து புண்ணா போயாச்சு, சாப்பிடவே முடியாது." நான் ஏன் இதை சொல்கிறேன்என்று நீங்கள் பொறுமையாக கேட்கவேண்டும். "சாப்பிடவே முடியாது. இனிமே அவன் இருக்கிறதும் ஒன்னுதான், செத்து போறதும் ஒன்னுதான்" என்றார் மருத்துவர்.

"நீங்க அந்த பையனைக் கேட்கக் கூடாதா, ஏன்டா இப்படி விஷம் குடிச்சியே, நீ இப்படி பண்ணலாமாடான்னு"."கேட்டேன் சார். அவன் சொன்னதைக் கேட்டு நான் அப்படியே அதிர்ச்சியில் உட்கார்ந்து இருக்கேன்" என்றார்.

"எல்லா சினிமாவிலேயும் காதலிப் பாங்க. பெற்றோர் எதிர்த்த உடனே விஷம் குடிப்பாங்க. அந்த விஷம் குடிச்ச உடனே பெத்தவங்க எல்லாம் மனசு மாறி, உடனே ரிஜிஸ்டர் ஆபீஸ் கூட்டிட்டு போய் மாலை போடுவாங்க. கல்யாணம் ஆகி 'சுபம்' அப்படின்னு அந்தப் படத்தோட கடைசி காட்சி முடியும். அதுதான் நடக்கும்னு நினைச்சு நானும் விஷம் குடிச்சேன் அப்படின்னு சொன்னான்.

ஏன்னா, சீன் பை சீன் (Scene by scene) அவன் பாத்துட்டான். முதல் சீன் இவங்க காதலிப்பாங்க; இரண்டாவது சீன் அப்பா அம்மா எதிர்ப்பாங்க; மூன்றாவது சீன் அவன் விஷம் குடிப்பான்; நான்காவது சீன் ஆஸ்பத்திரி கூட்டிட்டு போவாங்க; ஐந்தாவது சீன் உடனே அவங்கள எல்லாரும் சேர்ந்து சேர்த்து வச்சிருவாங்க, எனக்குக் கல்யாணம் ஆயிடும்னு நினைச்சேன்" என்றான். இவர் சொன்னார், "சாப்பிடவே முடியாதுடா உன்னால, குடலே வெந்து போச்சு, உனக்கு வாழ்க்கையே இனிமே கிடையாதுடா, என்னடா இப்படி பண்ணிட்டியே" என்று.

இந்தக் காட்சிகள் எப்படி நிஜமாக நம்பப்பட்டதோ, அப்படி இப்போதைக்கு தமிழ்நாடு விஷம் குடித்திருக்கிறது.

தாயுமானவனாகத் தவிக்கும் தளபதி

ஆனால், எனக்கு இப்போதும் தமிழர்கள் மீது உள்ள அக்கறையால் சொல்கிறேன்; இவ்வளவு குழந்தைத்தனமாக இருக்கிறீர்களே என்று பெற்ற வயிறு பற்றி எரிய நான் வருத்தப்படுகிறேன். ஒரு காட்சியும் அடுத்த காட்சியும் ஒரு ஃபிலிம் ரோலில் (Film roll) மாற்றி விடலாம். ஆனால் நடைமுறையில் மாற்றுவதற்கு 50 ஆண்டு காலம் இந்த மனிதனைப் (கலைஞரைப்) போன்று ஒருவர் படாத பாடுபட வேண்டும். இவர் சந்திக்காத சிறைச்சாலைகளா? இவர் சந்திக்காத தடியடிகளா? இவர் சந்திக்காத அவமானங்களா? இவர் சந்திக்காத விமர்சனங்களா? எத்தனை விதமான துயரங்களைச் சந்தித்தார்! ஒரே ஓர் உத்தரவை இந்த நாட்டில் நிறைவேற்றுவதற்கே50 ஆண்டு காலம் பாடுபட வேண்டி இருக்கிறது.அடுத்த காட்சியில் எதுவும் நடக்காது என்பதைத் தமிழ் மக்கள் மிக விரைவில் புரிந்து கொள்வார்கள்.

கலைஞர் அவர்கள் எத்தனையோ இலக்கியங்கள் எழுதினார்; தொல்காப்பியத்துக்கு உரை எழுதினார்;நிறைய கவிதைகள் எழுதினார்; நிறைய நூல்கள் எழுதினார். ஆனால், அவர் எழுதி வெளியிட்ட பதிப்புகளிலேயே தமிழுக்கு அவர் கொடுத்த மிகச்சிறந்த பதிப்பு"தளபதி மு.க. ஸ்டாலின்" என்ற புத்தகம்தான்.

என்ன நிதானம்! எந்தச் சூழ்நிலையிலும் தடுமாறாத குணம்! அதாவது இதைப் போன்று ஒருவர் தன் தொகுதிக்கு பாடுபட முடியாது என்று, அவ்வளவு கண்ணுக்குக் கண்ணாக வளர்த்தும், அதிலிருந்து தான் இப்படி அடைய வேண்டிய வெற்றியை அடைய முடியாத போதுகூட, இம்மிகூட அசராமல் மறுநாள் அந்த மக்களைப் போய் பார்த்துவரும் ஒரு பண்பு. விஷமே பிள்ளைகள் குடித்தாலும் தாய்சென்று பார்க்காமல் இருக்க முடியுமா? எப்படியாவது மீண்டும் விஷம் குடித்த பிள்ளையைக் காப்பாற்ற வேண்டும் என்று பெற்ற மனம் தவிக்காதா?

இன்றைக்குத் தாயுமானவனாக அந்தத் தளபதியின் மனம் தவிக்கிறது. "இப்படி நம்முடைய மக்கள் விஷம் குடித்திருக்கிறார்களே, இவர்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று இன்னமும் அந்தத் தாயுமானவன் தவித்துக் கொண்டுதான் இருக்கிறார் என்பதை மறந்து விடக்கூடாது.

கொள்கை மோதல்; திராவிடமும் - ஆர்.எஸ்.எஸ்.-உம் (Ideological Clash)

நான் ஏதோ ஒரு கோபத்தில் ஆர்.எஸ்.எஸ்.ஐப் பேசினேன் என்று நினைக்காதீர்கள். இட்ஸ் அன் ஐடியலாஜிக்கல் கிளாஷ் (It's an ideological clash). திராவிட இயக்கம் என்பது பேரறிஞர் அண்ணாவால் பெரியாரிடமிருந்து எதற்குத் தோற்றுவிக்கப்பட்டது?

இந்தியா விடுதலை அடைந்தபோது உச்சத்திலே இருந்தது இந்திய தேசிய காங்கிரஸ். அந்த இந்திய தேசிய காங்கிரஸுக்குச் சவாலாக இருந்தது இரண்டு; ஒன்று மதத்தை அடிப்படையாகக் கொண்ட ஆர்.எஸ்.எஸ்., இன்னொன்று சமூக சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட தந்தை பெரியார். இது இரண்டுதான் இந்திய தேசிய காங்கிரஸுக்கு அப்போது சவால். பெரியார் காங்கிரஸை விட்டு வெளியில் வருகிறார்;சமூக மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்று போராடுகிறார். அப்போது அதேபோன்று அவர்கள் இந்து மதத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு, மதம் சார்ந்த நாடாக இதை மாற்ற வேண்டும் என்று ஒரு கொள்கையை வகுக்கிறார்கள். மறந்து விடாதீர்கள், இந்திய விடுதலைக்குப் பிறகு இரண்டு இயக்கங்கள்தான் வலிமையானவை; ஒன்று மதம் சார்ந்த ஆர்.எஸ்.எஸ்., இன்னொன்று இனம் சார்ந்த திராவிட இயக்கம்.

பலபேர் கேட்கிறார்கள், "திராவிடம் இனம்?" என்று எங்கே இருக்கிறது என்று கேட்கிறார்கள். இவர்கள் குழந்தைகளைப் போன்று பேசுகிறார்கள். 'இந்து' என்ற வார்த்தையே இடம் சார்ந்தது தெரியுமா உங்களுக்கு? இந்து என்பது ஒரு மதம் என்பது பின்னாலே வந்தது; அது இடம் சார்ந்த இடச்சுட்டு. அதாவது, சிந்து நதிக்கு இந்தப் பக்கம் வாழுகிறவர்கள் இந்துக்கள். நீ எந்த மதமாக வேண்டுமானாலும் இருக்கலாம்;சிந்து நதிக்கு இந்தப் பக்கம் வாழுகிறவர்கள் சிந்தூஸ் (Sindhoos). நம்மை 'மதராசி' என்று ஒரு காலத்திலே அழைப்பார்கள்; மதராஸுக்கு இந்தப் பக்கம் வாழுகிறவர் மதராசி. அதுபோன்று, சிந்தூஸ் என்று அழைக்கப்பட்டவர்கள் இந்துக்கள். அது இடச்சுட்டு.

இடச்சுட்டு – மதச்சுட்டு

இடச்சுட்டு எப்படி மதச்சுட்டாக மாறிற்றோ, அப்படித்திராவிடம் என்பது இடச்சுட்டாக இருந்து இனச்சுட்டாக மாறிவிட்டது. அது ஓர் இனத்தின் அடையாளமாகப் பின்னாளில் மாறி இருக்கிறது. இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த இரண்டு இயக்கங்களுக்கும் இடையிலான ஓயாதப் போர் நிற்கப் போவதே இல்லை. நீங்கள் தற்காலிகமான நாற்காலிகளைப் பற்றிய சிக்கல்களைத் தள்ளி வைத்துவிட்டு, கொள்கை ரீதியான போர் எங்கே நடைபெறுகிறது என்பதைப் பற்றித் தெளிவாக இருக்க வேண்டும் என்ற விண்ணப்பத்தில்தான் நான் இந்தப் பாட